நிதியியல் மோசடிகள் - நேர்மையில் மறைந்துள்ள சூழ்ச்சி

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் மோசடிகளால் பாதிக்கப்படுவதைத் தணிக்கும் பொருட்டுசந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் உரிய காலத்தில் தொடர்புடைய சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கு அறிவித்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், கட்டுரைகளை வெளியிடுதல், வங்கித்தொழில் நிறுவனங்களில் துண்டு பிரசுரங்களை காட்சிப்படுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

அவதானமாக இருங்கள்

எவ்வாறாயினும், நிதியியல் மோசடிகளின் அச்சுறுத்தல்களை தணிப்பதற்கான முக்கிய பொறுப்பு பொது மக்களின் கைகளிலேயே காணப்படுகிறது.ஆளொருவர் மோசடிக்குள்ளாகி பாதிப்படைந்ததையடுத்து எழுகின்ற பல்வேறு தனிப்பட்ட மற்றும் சமூகச் செலவுகளை தவிர்க்கும் பொருட்டு, மோசடிகள்பின்னர் அதனை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் விட,பொதுமக்கள் ஆரம்பத்திலேயே அதனைதவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்வது சிறந்ததாகும்.

நிதியியல் மோசடிகளிலிருந்து தங்களைத் தாமே பாதுகாத்துக்கொள்வதற்கு பின்வரும் தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றப்படலாம்.

✸வங்கிக் கணக்கு விபரங்கள், கடனட்டை ஃபற்று அட்டை விபரங்கள், ஒரு தடவை கடவுச்சொற்கள் போன்ற நிதியியல் தகவல்களை இனம்தெரியாத நபர்களுக்கு வெளிப்படுத்த வேண்டாம்.

✸கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் நம்பகத்தன்மையை எப்பொழுதும் உறுதிப்படுத்துங்கள்.

✸அறிமுகமில்லாத நபருக்கு முற்கொடுப்பனவுகளை மேற்கொள்ளவோ அல்லது அறிமுகமில்லாத உற்பத்திகளை கொள்வனவு செய்யவோ வேண்டாம்.

✸சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல்களை, செய்திகளை, மீஇணைப்புக்களை உடன் விளம்பரத் திரைகளை திறக்க வேண்டாம்.

✸தன்னிச்சையாக செயற்பட வேண்டாம். ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நிதியியல் கொடுக்கல்வாங்கல் சந்தர்ப்பங்களில் உங்களுடைய குடும்பம், வயது வந்தோர்,நெருங்கிய நண்பர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்வதுடன் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

✸நிதியியல் உலகின் பிந்திய சாதகமான மற்றும் பாதகமான போக்குகள் தொடர்பில் இற்றைப்படுத்திக்கொள்ளுங்கள்.

✸பொதுமக்களுக்கான செய்தி

உழைப்பின்றி உணவில்லை. நிதியியல் மோசடிகளில் உறுதியளிக்கப்படுகின்ற நன்மைகள் ஆரம்பத்தில்கவர்ச்சிகரமானதாக இருப்பினும், இறுதியில் துன்பத்திற்கு இட்டுச்செல்லும். நிதியியல் மோசடிகளை இனங்காண்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் அவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்

ஏ.பி.எல்.ஜே துலாஞ்ஜலி திலகரத்ன
உதவிப் பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி

கொள்வதற்கும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டுமென பொதுமக்கள் இத்தால் வலியுறுத்தப்படுகின்றனர். உங்களுக்கு பரீட்சயமல்லாதவற்றுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னர் எப்பொழுதும் அவை தொடர்பில் விசாரித்து ஆராய்ந்துச் செயற்படுங்கள். உங்களுடைய தொடர்ச்சியான விழிப்பு, உரிய நேரத்திலான நடவடிக்கைகள், மற்றும் நிதியியல் அறிவு என்பன குறுங்காலத்தில் நிதியியல் மோசடிகளை தவிர்ப்பதற்கு உதவுவதுடன்நீண்ட காலத்தில் பாதுகாப்பான ஆற்றல்மிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் வழிவகுக்கும்.

முற்றும்

கொம்பாங்க் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் நன்கொடை

COMMERCIAL BANK

அரசாங்கவைத்தியசாலைகளையும் சுகாதாரநிறுவனங்களையும் ஆதரிக்கும் கொமர்ஷல் வங்கியின் முன்னெடுப்பின் கீழ் பயன்பெற்ற புதிய பயனாளியாக திருகோணமலைமாவட்டபொதுவைத்தியசாலை, இதன்மூலம் வைத்தியசாலையினால் வழங்கப்படும் அவசரசேவைகளை மேம்படுத்தக்கூடிய சிலஅத்தியாவசியமருத்துவஉபகரணங்களைப் பெற்றுக்கொண்டது.

திருகோணமலைவைத்தியசாலைக்கான நன்கொடைகளில் பிராண வாயுசீராக்கிகள், இரத்தஅழுத்தமானிகள்,சேலைன் தாங்கிகள்,அதியுயர் சார்புநிலைஅலகுபடுக்கைகள்,படுக்கையருகிலானபிராணவாயுமானிகள், இருதயத் துடிப்புகணினித்திரைகள், இருதயத் துடிப்புவரைகருவி (CTG) இயந்திரம், குரல்வளை காட்டிகாணொளி இயந்திரம், இரத்தநாளஅடைப்பு (DVT) பம்பி ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

வங்கியின் CSR நிதியம் ஏற்கெனவே 25க்கும் மேற்பட்ட அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருத்துவஉபகரணங்களையும் தனிநபர் பாதுகாப்பு உபகரண (PPE) ஆடைகள்,முகக்கவசங்கள்,சிகிச்சைமுகக்கவசங்கள், கை சுத்திகரிப்பான்கள்,கீற்றுவிளக்குகள்,நாடித் துடிப்புபிராணவாயுமானிகள்,பல பேற்றுகணினித்திரைகள் மற்றும் பிராணவாயுசெறிவாக்

கொமர்ஷல் வங்கியின் கிழக்குப் பிராந்தியமுகாமையாளர் அருளம்பலம் ஜெயபாலன் [இடமிருந்து மூன்றாமவர்] திருகோணமலை கிளையின் முகாமையாளர் சோமசுந்தரம்சிவகுமார் [இடமிருந்து இரண்டாமவர்] முன்னிலையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர். ஐ.டபிள்யூ.எம். ஜகத் விக்ரமரத்னஅவர்களுக்குஉபகரணங்களைக் கையளிக்கிறார்.

கிகள் ஆகியவற்றை கொவிட்-19 க்குஎதிரான போராட்டத்துக்கு ஆதரவாக நன்கொடையாக வழங்கியிருந்தது.

இந்தநன்கொடைகள் நலன்பேணுபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நோயாளர்களால் உணரப்படும் சுகாதாரசேவையின் தரத்தை மேம்படுத்தவும், வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தவும் வங்கியினால் வழங்கப்பட்டிருந்தன. கொமர்ஷல் வங்கிஅரசாங்கத்தினால் கடந்தவருடம் ஸ்தாபிக்கப்பட்ட தேசியகொவிட்-19 சுகாதாரமற்றும் சமூகபாதுகாப்புநிதியத்துக்கும் பண நன்கொடையையும் வழங்கியது.

காபன் அடிச்சுவடு உறுதியளிப்பை நிறைவு செய்த முதலாவது பாற்பொருட்கள் நிறுவனமாக கொத்மலே இடம்பிடித்தது

காகில்ஸ் இனது துணைநிறுவனங்களான Kotmale Dairy Products மற்றும் Cargills Quality Dairies ஆகியனகாபன் அடிச்சுவடு உறுதியளிப்பைநிறைவுசெய்த இலங்கையின் முதலாவதுபாற்பொருட்கள் நிறுவனங்களாக இடம்பிடித்தன. இந்தஉறுதியளிப்பானதுசுற்றாடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கைகாலநிலைநிதியத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இரு நிறுவனங்களும் தமதுகாபன் அடிச்சுவடுகுறித்துசுயாதீனமானமதிப்பாய்வை பொறுப்பேற்றதோடு 2020 ஆம் ஆண்டுக்கான பச்சைவீட்டு வாயு வெறியேற்ற மதிப்பாய்வை வெற்றிகரமாக நிறைவுசெய்தன.

காபன்அடிச்சுவடுஉறுதியளிப்பானது இரு நிறுவனங்களுக்கும் தமதுதற்போதைய சூழல் பாதிப்புகளைமதிப்பிடுவதற்கும்மற்றும் எதிர்காலத்தில் காபன் நடுநிலைமைஎன்றநிலையை எட்டுவதற்காகபச்சைவீட்டுவாயுவெளியேற்றத்தைகுறைப்பதற்கும்முறையாகஇலக்குகளைஅமைப்பதற்குஉதவுகின்றது. தற்பொழுதுகாகில்ஸ் பாற்பொருட்கள் துறையானதுதனதுநடவடிக்கைகளில் பல்வேறுநிலைபேறானமுன்னெடுப்புகளைமேற்கொண்டுவருகின்றது. இலங்கையின் பாரியஒருங்கிணைக்கப்பட்டபாற்பொருட்கள் நிறுவனமான,பாந்துராகொடயில் அமைந்துள்ள Cargills Quality Dairies ஆனது 1.4 ஆறு சூரிய சக்திபிறப்பாக்கல் கொள்ளளவைகொண்டிருப்பதோடு இது ஒவ்வொருவருடமும் 35C000மப காபனீரொட்சைட்டுக்கு சமமான அளவுவெளியேற்றத்தைசேமித்துத் தருகிறது. நிறுவனத்தின் சுற்றுச்சூழல் உயிர்ப் பல்வகைமையை மேம்படுத்துவதற்காகநிறுவனமானது 2000 க்கு மேற்பட்டமரங்களோடு சுற்றுச்சூழல் இடைத்தாங்கல் வலயமொன்றை உருவாக்கியுள்ளது. நிறுவனத்தின் மத்திய குளிர்பதப்படுத்தல் செயன்முறையானது

அதியுயர்குளிர்ப்பதப்படுத்தல் செயற்திறன் கொண்ட வாயுவொன்றைப் பயன்படுத்துவதால்சுற்றுச்சூழலில் மிகக்குறைந்த பாதிப்பை கொண்டுள்ளது. அதன் ஓசோன் பாதிப்புசாத்தியம் (ODP) மற்றும் புவிவெப்பமயமாதல் சாத்தியம் (GWP) என்பனவும் ஒப்பீட்டளவில் பூச்சியமாகக்கருதப்படுகின்றன.

அத்துடன் நிறுவனமானதுஉறுதியானநீர்முகாமைத்துவம் மற்றும் கழிவு முகாமைத்துவமுறைமையைநிறுவனவளாகத்தில் கொண்டமைந்துள்ளது. மழைநீர்சேகரிக்கப்பட்டகுளிரூட்டல் தேவைகளுக்குப்பயன்படுத்தப்படுவதோடு நிறுவனத்தின் கழிவுநீர் reverse osmosis முறையின் மூலமாகசுத்திகரிக்கப்பட்டு குளிராக்கல் முறைமைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. நிறுவனத்தின் நடவடிக்கைகளால் விளைவாகும் மொத்தகழிவில் கிட்டத்தட்ட 95% மீள்சுழற்சிக்கு உள்ளாக்கப்படுவதோடு, தயாரிப்புநடவடிக்கைகளில் உருவாகும் கழிவு பிளாஸ்டிக்கானதுபிளாஸ்டிக் உருமாற்ற அஸ்பல்ட் கொங்கிரீட் ஆகமாற்றப்படுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றது.பின்னர்அதுகாகில்ஸ் புட்சிட்டியால் முன்னெடுக்கப்படும் பிளாஸ்டிக் வாகனத் தரிப்பிட செயற்திட்டத்துக்கான முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்தப்படுத்தப்பட்டு, மீள் சுழற்சிக்குஉள்ளாக்கமுடியாதபிளாஸ்டிக் கழிவுகளுக்கு ஓர் இறுதிப்பயன்பாட்டை வழங்குகிறது.

புதிய Komatsu PC210-10M0 அகழ்வு இயந்திரத்தை இலங்கையில் அறிமுகம் செய்யும் DIMO

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, அண்மையில் இலங்கையில் புதிய Komatsu PC210&10M0 Excavator அகழ்வு இயந்திரத்தை அறிமுகப்படுத்தியது. கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற கொமட்சு வாடிக்கையாளர் ஒன்றுகூடல் நிகழ்வில் வைத்து, கலாநிதி கித்சிறி மஞ்சநாயக்கவிடம் முதலாவது PC210-10M0 அகழ்வு இயந்திரம் கையளிக்கப்பட்டு அது வைபவ ரீதியாக அறிமுகமானது.

இந்த சமீபத்திய அறிமுகத்தின் மூலம், பல புதிய அம்சங்களுடன் எரிபொருள் திறன் கொண்ட அகழ்வு இயந்திரத்திற்கான அதிகரித்து வரும் வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்வதை DIMO நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புதிய இயந்திரம் '200 இல் 300 இன் வேலை' எனும் எண்ணக்கருவின் கீழ் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த Komatsu PC210-10M0 அகழ்வு இயந்திரமானது 300-class (30 தொன்) இயந்திரமாக செயல்படும் திறனைக் கொண்டுள்ள அதே நேரத்தில் 40% அதிகமான உற்பத்தித்திறனை வழங்குகிறது. PC200-8 மாதிரியுடன் ஒப்பிடுகையில், இது 200-class (20 தொன்) இல் இயங்குகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு குறைந்த செலவில் அதிக உற்பத்திக்கான வாய்ப்பை வழங்குகிறது. ஒப்பிட முடியாத ஜப்பானிய தொழில்நுட்பத்தின் உதவியுடன், இந்த இயந்திரத்திற்கு சிறந்த நீடித்த உழைப்புட

னான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது டன், இது இலங்கையின் எந்தவொரு நிலைமைக்கும் அல்லது வேலைத் தளத்திற்கும் ஏற்றதாக இது காணப்படுகின்றது. அதே நேரத்தில் அதன் சூழலுக்கு உகந்த 3 அடுக்கு என்ஜின் (tier 3 engine) காபன் வெளியேற்றத்தையும் குறைக்கிறது.

DIMO வின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமிந்த ரணவன இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், நாம் இலங்கையில் Koma-tsu உடனான வலுவான உறவின் 50 ஆண்டுகளை சமீபத்தில் கொண்டாடினோம். அத்துடன் கட்டுமான மற்றும் சுரங்கத் துறைக்கு உயர்தர தயாரிப்புகளை வழங்க DIMO வின் தொடர்ச்சியான முயற்சிகளில் Komatsu உடன் கூட்டுச் சேர்ந்திருப்பதில் நாம் பெருமிதமடைகிறோம். அனைத்து புதிய Komatsu PC210-10M0 அகழ்வு இயந்திரங்களும் DIMO இன் விற்பனை வரிசையில் உள்ள மற்றுமொரு வருகையாகும். இது உள்ளூர் தொழில்துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும் இலங்கைக்கு உலகளாவிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான எமது தொடர்ச்சியான முயற்சிகளை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

DIMO வின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே கருத்துத் தெரிவிக்கையில், எமது அதிநவீன பொறியியல் தீர்வுகளைக் கொண்டு நாட்டின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதில் DIMO எப்போதும் முன்னணியில் உள்ளது. இந்த சமீபத்திய பொறியியல் கண்டுபிடிப்புகளின் அறிமுகத்தின் மூலம், நாம் சேவை வழங்குகின்ற சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளைத் தூண்டுகின்ற எமது பயணத்திற்கான பாதை மேலும் விசாலமடைகிறது.

தனது முதல் சில்லறை விற்பனை நிலையத்தை பஞ்சிகாவத்தையில் திறக்கும் Spectrum Trading

Stafford குழுமத்தின்அங்கமான Spectrum Trading Company (Pvt) Limited நிறுவனமானது, இலங்கையில் உதிரிப்பாகங்கள் மற்றும்வாகன உபகரணங்களின் அங்கீகரிக்கப்பட்ட, மிகவிரும்பப்படும் விநியோகஸ்தரும்விற்பனைமுகவருமாகும். அது தனது முதலாவது சில்லறைவிற்பனை நிலையத்தை, குழுமத்தின் முகாமைத்துவபணிப்பாளர் கலாநிதி காலிங்ககலுபெருமவின்தலைமையின்கீழ், கடந்தஒக்டோபர் 24ஆம்திகதி பஞ்சிகாவத்தையில் திறந்துவைத்தது.

இல 01, ஜயந்தவீரசேகரமாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள இவ்விற்பனை நிலையமானது, நிறுவனத்தின் முதலாவது சில்லறை விற்பனை நிலையமாகதனதுசேவையைவழங்கும். நாடுமுழுவதும்உள்ள 300 இற்கும்மேற்பட்டமுகவர்வலையமைப்பிற்குமேலதிகமாக, பல்வேறு தயாரிப்புகளின்வகைகளை, ஒருஅங்கீகரிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளராக செயற்பட்டுவிநியோகிப்பதுடன், நிறுவனத்தினால் வழங்கப்படும் அனைத்துவகையானசேவைகளுக்கும்ஒருதொடுபுள்ளியாகவும் இவ்விற்பனைநிலையம்செயற்படும்.

Spectrum Trading Company நிறுவனமானது, MOTUL Lubricants, TORCH Filters, Spark Plugs, SHAKO Riding Helmets PUMA டயர்களுக்கான இலங்கையில் ஒரேயொருஅங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகும். Spectrum ஆனது, Honda வாகனங்களின் அசல்உதிரிப்பாகங்கள், மின்சக்திபிறப்பாக்கிகள், ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகஜராகவும் உள்ளது.

இத்திறப்புவிழாகுறித்துகருத்துதெரிவித்தகலாநிதிகாலிங்ககலுபெருமa, எமதுமுதல்விற்பனை நிலையத்தைதிறந்துவைப்பதுதொடர்பானஅறிவிப்பை மேற்கொள்வதில்நாம்மகிழ்ச்சியடைகிறோம். எமது வளர்ந்துவரும் முக ஜர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வலையமைப்பு ஆகியன, Spectrum குழுவினரால்வழங்கப்படும்சேவையின்தரத்திற்குஒருசான்றாகும்என்பதுடன், இதுபல ஆண்டுகளாகக்கட்டமைக்கப்பட்ட நம்பிக்கையின்பிரதிபலிப்பாகும். நாடு முழுஜதிலும் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குபயனுள்ளதொடு புள்ளியாக செயற்படும் பல விற்பனை நிலையங்களில் இதுவே முதன்மையானதாக விளங்குமென நாம் நம்புகிறோம். என்றார்

எதிர்காலத் திட்டங்களைவெளியிட்டு 2021ஆம் ஆண்டிற்கான சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவித்தது Oriflame Sri Lanka

தொற்றுநோய் மற்றும் சமூக-பொருளாதாரகாலநிலைமாற்றங்களின் சவால்களுக்குமத்தியிலும் Oriflame Sri Lanka தடையை உடைத்து 2021 இல் வலுவாக வெளிப்பட்டுள்ளது. 1967ஆம் ஆண்டுநிறுவப்பட்ட, Oriflame ஒரு சமூக விற்பனை அழகுசாதன நிறுவனமாகும், இது 60க்கும் மேற்பட்டசந்தைகளில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளது, ஸ்வீடிஷ், இயற்கையால் ஈர்க்கப்பட்ட ,புதுமையானஅழகுமற்றும் ஆரோக்கியதயாரிப்புகளின் பல்வேறு வரிசைகளை சுமார் 3 மில்லியன் Oriflame மூலம் வர்த்தகநாமபங்குதார்கள் மூலம் விற்கப்பட்டுசந்தைப்படுத்தப்படுகிறது.

1997ஆம் ஆண்டில், Oriflame இலங்கையில் அழகுசாதனப் பொருட்களை விற்பனைசெய்வதற்காகபுதுமையானமுறையில்தனதுவாய்ப்புகளைத் திறந்ததுடன்,கடந்த 24 ஆண்டுகளாகஆயிரக்கணக்கானமக்களின் கனவுகளை நிறைவேற்றும் அதேவேளையில் சீராகவளர்ச்சியடைந்துள்ளது.

''ஆசியாவில் Oriflame இன் உலகளாவிய இயக்கவியல் மற்றும் வளர்ச்சிதிறன் அபரிமிதமானதுமற்றும் வியத்தகுமுறையில் அதிகரித்தசந்தைப் பங்குடன் ஆண்டுக்குஆண்டுவிரைவானவளர்ச்சியைஅனுபவித்தது. முதல்நிலை அழகுநிறுவனமாகதிகழவேண்டும் என்றதெளிவானபார்வையுடன் நாங்கள் மூலோபாய ரீதியாக

இணைந்துள்ளோம். Oriflame மக்கள் சமூகத்தை பிரதிபலிக்கிறது,அழகு மற்றும் கனவுகளைநிறைவேற்றுவதில் ஆர்வமாக உள்ளது. உலகெங்கிலும் உள்ள மக்கள் தங்கள் கனவுகளை நனவாக்க உதவுவதேஎங்களின் நோக்கமாகும்'' என Oriflame இன் தெற்காசியாவிற்கான மூத்ததுணைத் தலைவர் ; Frederic Widell தெரிவித்தார்.

Oriflame Sri Lanka அதன் பரந்தஅளவிலானதயாரிப்புகள் மூலம் ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் வாழ்க்கையைத் தொட்டுள்ளதுமற்றும் கடந்த 24 ஆண்டுகளாக இந்தநிறுவனத்தின் வெற்றியின் பின்னணியில் உள்ளவர்களைஅங்கீகரிப்பதைவிட சிறந்த வழி எதுவுமில்லைஎன்றுநம்புகிறது. 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்தகலைஞர்களைஅங்கீகரிக்கும் பாராட்டுநிகழ்வு,முக்கியகருப்பொருளுடன் இணைக்கப்பட்டது - ''இரட்டைவேகவெற்றியின் ஊக்கமளிக்கும் தருணங்கள்''இது உள்ளூர் சந்தையில் Oriflame இன் துடிப்பானதாக்கத்தை கொண்டாடியது.

Oriflame Sri Lanka இன் அதிவேகவளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய் இருந்தபோதிலும்,தலைவர்கள் சிறப்பானமுறையில் செயல்பட்டுள்ளனர்,கடந்தஆண்டுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கொண்டுள்ளதுஎன்று கூறினார்.

Oriflame இன் எதிர்காலத் திட்டங்கள் வளர்ச்சித் திறனைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன,மேலும் நாட்டில் அதன் இருப்பைமேலும் வலுப்படுத்தஆற்றல்மிக்கதிட்டமும் அதனிடம் உள்ளது.